TNVR070025542023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை – திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.70/2023

CNR No.TNVR070025542023

அன்னலட்சுமி ... வாதி

/எதிர்/

1. வட்டாட்சியர் அவர்கள்
சாத்தூர்.
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்
விருதுநகர் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 18.08.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 02.02.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முனீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

**தீர்ப்புரை**

வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணனின் சகோதரன் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு என்று விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவு தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவிடக்கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்</u>:–

ராஜ் என்ற நல்லசாமி என்பவருக்கும், அவரது மனைவி ராமகிருஷ்ணம்மாள் என்பவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் இருந்துள்ளார். அவர்களில் மூத்தவர் நல்ல கிருஷ்ணன் ஆவார். அடுத்து இளையவர் சீனிவாசன் ஆவார். நல்லகிருஷ்ணன் என்பவர் திருமணம் முடித்து கணபதியாபுரம் கிராமத்தில் குடியிருந்து வந்துள்ளார். அவரது தம்பி சீனிவாசன் என்பவர் திருமணம் செய்து கொள்ளாமல் இளம் வயது முதல் கோயம்பத்தூரில் உள்ள தனியார் மில் ஒன்றில் வேலை செய்து வந்துள்ளார்.

வாதியானவர் நல்லகிருஷ்ணன் என்பவரின் மனைவி ஆவார். மேற்படி நல்ல கிருஷ்ணன் என்பவர் கடந்த 23.03.2015 ம் தேதியில் இறந்துவிட்டார். இந்நிலையில் வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணன் என்பவரின் உடன்பிறந்த சகோதரர் சீனிவாசன் என்பவர் கடந்த 1996 ஆண்டு கணபதியாபுரம் கிராமத்திற்கு வந்து குடியிருந்து வந்துள்ளார். வாதி மற்றும் வாதியின் கணவருடன் குடியிருந்து வந்தபோது மேற்படி சீனிவாசனுக்கு தேவையான அனைத்தையும் வாதி மற்றும் வாதியின் கணவரே செய்து வந்துள்ளார்கள். இந்நிலையில் மேற்படி சீனிவாசன் வேலைக்கு செல்வதாகக்கூறி வெளியூருக்கு சென்று பின்பு மீண்டும் கணபதியாபுரம் திரும்பி வந்துவிடுவார். இந்த நிலையில் கடந்த 10.02.1997 ம் ஆண்டு விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கணபதியாபுரம் கிராமத்தில் இருந்து கோயம்பத்தூருக்கு வேலைக்கு செல்வதாகக்கூறி வீட்டை விட்டு சென்றவர் வீடு திரும்பவில்லை. வாதியின் கணவரும், அவரது உறவினர்களும் பல இடங்களில் தேடிப்பார்த்தும் காணாமல்போன சீனிவாசன் குறித்து எந்த தகவலும் கிடைக்காததால் வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணன் என்பவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 15.02.1997 ம் தேதியில் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுவை பெற்ற காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் வாதியின் கணவர் மீண்டும் அப்பையநாயக்கன்பட்டி காவல்நிலையத்தில் கடந்த 04.06.1997 ம் தேதியில் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுவிற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் வாதியின் கணவர் 23.03.2015 ம் தேதியில் வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணன் என்பவரும் இறந்துவிட்டார். மேற்படி வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணன் கொடுத்த புகார் மனு குறித்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, வாதி தனது கணவரின் சகோதரன் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு என்று அறிவிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்</u>**:-

ராஜ் என்ற நல்லசாமிக்கு இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. அதுபோல கணபதியாபுரம் கிராமத்தில் வசித்த வந்ததற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. கோயம்பத்தூரில் வேலை பார்த்து வந்தார் என்று காண்பிக்க எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை. அதேபோல காணாமல் போனதாக சொல்லப்படும் சீனிவாசனம் என்பவரை கடைசியாக பார்த்ததாக எந்த சாட்சியும் வழக்குரையில் தெரிவிக்கவில்லை. எனவே, வாதியின் வழக்கானது பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணனின் சகோதரர் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்யுமாறு வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

5) வாதி தரப்பில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் 5 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6) **<u>எழுவினா 1</u>**:-

வாதியின் கணவர் நல்ல கிருஷ்ணனின் சகோதரர் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்யுமாறு வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

இந்த வழக்கானது வாதியின் கணவரான நல்ல கிருஷ்ணனின் உடன்பிறந்த சகோதரர் சீனிவாசன் Civil Death அடைந்துவிட்டதாக அறிவித்து விளம்புகை செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதியின் கணவரின் சகோதரர் வாதி குடும்பத்துடன் குடியிருந்து வந்ததாகவும், கடந்த 10.02.1927ம் தேதி வெளியூருக்கு செல்வதாக வீட்டை விட்டு வெளியே சென்றவர், திரும்ப வராத காரணத்தினால் 15.02.1997ம் தேதியில் வாதியின் கணவர் புகார் கொடுத்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதியின் கணவர் இறந்துவிட்டதால் வாதி என்ன செய்ய வேண்டுமென்று தெரியாமல் இருந்துவிட்டார். வாதியின் கணவரின் சகோதரர் சீனிவாசன் காணாமல் போய்விட்டதால் சீனிவாசன் இறந்துவிட்டார் (Civil death) என விளம்புகை செய்யுமாறு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இவ்வழக்கில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ஐ பிரதிவாதிகள் தரப்பில் செய்த குறுக்குவிசாரணையில், "சீனிவாசன் யார் என்றால் எனது கணவரின் தம்பி ஆவார். சீனிவாசன் எங்கு குடியிருந்தார் என்றால் கணபதியாபுரத்தில் குடியிருந்தார். சீனிவாசன் வேலை எதுவும் செய்து வந்தாரா என்றால் மில்லில் வேலை செய்து வந்தார். எனது கணவர் பெயர் என்ன என்றால் நல்லகிருஷ்ணன் ஆகும். எனது கணவருக்கும் சீனிவாசனுக்கும் என்ன உறவு என்றால் அண்ணன் தம்பி ஆவார்கள். சீனிவாசன் எத்தனை வருடமாக கணபதியாபுரத்தில் குடியிருந்து வந்தார்ஏ ன்றால் 30 ஆண்டு காலமாக குடியிருந்து வந்தார். சீனிவாசன் எங்கு வைத்து காணாமல் போனார் என்றால் கணபதியாபுரத்தில் வைத்து காணாமல் போனார். சீனிவாசன் காணாமல் போனது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுத்தோம். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காணாமல் போன சீனிவாசனை கடைசியாக யார் பார்த்தார்கள் என்றால் எனது அண்ணன் வீரபாண்டி பார்த்தார்" என்றும்,

8) வா.சா.2 ஐ பிரதிவாதிகள் தரப்பில் செய்த குறுக்குவிசாரணையில், "அன்னலட்சுமி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்

அன்னலட்சுமியின் கணவருடன் பிறந்த சீனிவாசன் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சீனிவாசன் கடைசியாக எங்கு குடியிருந்தார் என்றால் கணபதியாபுரத்தில் குடியிருந்தார். சீனிவாசனை நான் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் 02.05.1996 ல் பார்த்தேன்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி விதமாக வா.சா.1 மற்றும் 2 சாட்சியம் அளித்துள்ளது வாதியின் வழக்கிற்கு ஆதரவாக வாதியின் கணவரின் சகோதரரான சீனிவாசன் என்பவர் காணாமல் போய்விட்டார் என்பதை நிரூபிக்கும் விதமாக இருந்து வாதியின் வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

9) மேலும், இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 108 ன் கீழ் 7 ஆண்டு காலத்திற்கு கேள்விப்படாதவர் உயிருடன் இருக்கிறார் என்பதை மெய்ப்பிக்கும் சுமையானது ஒரு மனிதன் உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்ற கேள்வி எழுந்து அவர் உயிருடன் இருந்திருப்பாரானால் அவரைப் பற்றி இயல்பாகவே கேள்விப்பட்டிருக்கக் கூடியவர்கள் 7 ஆண்டு காலத்திற்கு அவரைப்பற்றி கேள்விப்படவில்லை என்று மெய்ப்பிக்கும்போது அவர் உயிருடன் இருக்கிறார் என்பதை மெய்ப்பிக்கும் சுமையானது அவ்வாறு உறுதியாக உரைப்பவர் மீது மாற்றப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

10) மேலும், வா.சா.ஆ.2 ஆக 23.03.2015 ம் தேதியிட்ட வாதியின் கணவர் நல்லகிருஷ்ணன் இறப்பு சான்று நகல், வா.சா.ஆ.3 ஆக 15.02.1997 ம் தேதியிட்ட நல்லகிருஷ்ணன் காவல்கண்காணிப்பாளர் அவர்களிடம் கொத்த புகார் மனு நகல், வா.சா.ஆ.4 ஆக 04.06.1997 ம் தேதியிட்ட நல்லகிருஷ்ணன் என்பவர் அப்பையநாயக்கன்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு, வா.சா.ஆ.5 ஆக 06.02.2022 ம் தேதியிட்ட ராஜ் என்ற நல்லசாமி இறப்புச்சான்று உண்மைநகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விதமாக வா.சா.1, 2 சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளதும், வா.சா.ஆ.2 முதல் 5 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு அனுசரணையாக உள்ளதாலும், வாதியின் கணவரின் சகோதரர் சீனிவாசன் காணாமல் போய்விட்டார் என்ற சங்கதியையும், அவரை கண்டுபிடிப்பதற்காக வாதி மற்றும் வாதி தரப்பினர்கள் முயற்சி மேற்கொண்டார்கள் என்பதை வாதி சிறந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம்

நிரூபித்துள்ளதாலும், வாதியால் வாதியின் கணவரின் நல்ல கிருஷ்ணண் சகோதரர் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டார் என்று விளம்புகை செய்யுமாறு வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது தான் என எழுவினா 1 க்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் விடை அளித்து உத்தரவிடுகிறது.

11) <u>**எழுவினா 2**</u>:–

தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

இவ்வழக்கைப் பொறுத்து எழுவினா 1 வாதிக்கு ஆதரவாக அளித்துள்ள நிலையில், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கின் தன்மை மற்றும் தரப்பினர்கள் கருதி அவரவர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் எழுவினா 2 க்கு விடை அளித்து உத்தரவிடுகிறது.

12) இறுதியாக, வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கினை செலவு தொகையின்றி அனுமதித்து, வாதியால் வாதியின் கணவரின் நல்ல கிருஷ்ணண் சகோதரர் சீனிவாசன் என்பவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டார் என்று விளம்புகை செய்யுமாறு வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரத்தை வாதிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது,

13) இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்**</u>:–

வா.சா.1 – அன்னலட்சுமி

வா.சா.2 – வீரபாண்டியன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**:–

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | | ஆதார் அட்டை நகல் |
| வா.சா.ஆ.2 | – | 23.03.2015 | வாதியின் கணவர் நல்லகிருஷ்ணன் இறப்பு சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | – | 15.02.1997 | நல்லகிருஷ்ணன் காவல்கண்காணிப்பாளர் அவர்களிடம் கொத்த புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.4 | – | 04.06.1997 | நல்லகிருஷ்ணன் என்பவர் அப்பையநாயக்கன்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு |
| வா.சா.ஆ.5 | – | 06.02.2022 | ராஜ் என்ற நல்லசாமி இறப்புச்சான்று உண்மைநகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.